FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| juk;:- 13 (2018) | njhlughlYk; CIffw;ifAk;I | ,uz;L kzpj;jpahyk; |
|---|---|---|

## பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. நபரிடைத் தொடர்பில் உயர்மட்ட பின்னூட்டல் பற்றி மிகத் தெளிவாக குறிப்பிடும் தொடர்பாடல் மாதிரி.
    1) ஷெனோன் வீவர் மாதிரி   2) பெர்லோ மாதிரி   3) டீ. லாஸ்வெல் மாதிரி
    4) ஒஸ்குட் ஷ்ராம் மாதிரி   5) வில்பர் ஷ்ராம் மாதிரி

02. பின்னூட்டல் (Feed back) தொடர்பாடல் தொழிற்பாட்டுக்கு எடுத்தக் காட்டாக அமையக்கூடியது.
    1) அபிப்பிராயங்கள்   2) ஒருவழித் தொடர்பு   3) அறிக்கையிடல்
    4) கதை புனைதல்   5) கதை உருவாக்கம்

03. மிக முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு கூட்டப்படும் குழு.
    1) கொள்கைக் குழு   2) எழுமாறான குழு   3) தெரிவுக் குழு
    4) கற்றல் குழு   5) செயற்பாட்டுக் குழு

agaram.lk

04. ஞாபகத்தில் பதிவு செய்தல் செயன்முறை மூளையின் ஆற்றலுடன் தொடர்புபட்டதாகும்." பின்வருவனவற்றில் இடது மூளையின் ஆற்றல்கள் பற்றி உளவியலாளர்கள் குறிப்பிடும் செயன்முறை தொகுதியாக அமையக்கூடியது.
    1) கணித ஆற்றல், வகைப்படுத்தல்.
    2) இனங்காணல் தர்க்கம்
    3) வகைப்படுத்தல், விளக்கமளித்தல்.
    4) பகுத்தறிவு, ஆக்கத்திறன்
    5) விமர்சனம், சிக்கலான கோலம் பற்றிய புலக்காட்சி.

05. மொழியின் பயன்நிலைகளில் பிரதியாக்கமும் ஒன்றாகும். பின்வரும் கூற்றுக்களில் பிரதியாக்க செயற்பாட்டுடன் தொடர்புபட்டமையாதது.
    1) பிரதியாக்கம் ஒன்றிற்கு குறித்த நோக்கம் உண்டு.
    2) மொழியின் இலக்கணம், குறியீடுகள் பிரதியாக்கத்திற்கு அடிப்படையானது.
    3) பிரதியாக்கம் பல வடிவங்களில் உள்ளன.
    4) பிரதியாக்க வடிவங்கள் நவீன ஊடக அறிமுகங்களினால் மாற்றமடைந்துள்ளன.
    5) பிரதியாக்கம் என்பது எழுத்துக்களை கோர்த்து எழுதுதல் ஆகும்.

06. சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும் வகையில் முரண்பாடுகளைப் பயன்படுத்தக் கூடியதாக அமையும் வழிமுறை.
    1) தீர்வு   2) ஒடுக்குதல்   3) முகாமைத்துவம்
    4) மத்தியஸ்தம்   5) நிலைமாற்றுதல்.

07. தொடர்பாடல் குறித்த மிகத் தவறான கூற்றைத் தெரிவு செய்க.
1) தொடர்பாடல் வழிமுறையில் அனைத்துச் செய்திகளும் தகவல்களை வழங்குகின்றன.
2) தொடர்பாடலின் முக்கிய நோக்கு ஒரு பாதிப்பை (Impact) உருவாக்குவதே.
3) பெறுநர் இல்லாமல் ஒரு தொடர்பாடல் இருக்க முடியாது.
4) தொடர்பாடல் வழிமுறையில் தொடர்பியலாளரினதும் பெறுநரினதும் வகிபாகங்கள் நிலைத்த தன்மை கொண்டவை.
5) தொடர்பாடல் என்பது குறியீடுகளைப் பரிமாறிக் கொள்ளும் வழிமுறையாகும்.

08. உயிர்வாழும் மொழிகளில் பின்வரும் எந்த கூட்டங்கள் உள்ளடங்காது?
1) சிங்களம் - ஆங்கிலம் - சமஸ்கிருதம்
2) இத்தாலியன் - ருஷியன் - தமிழ்
3) பாளி – சமஸ்கிருதம் - இலத்தீன்
4) பிரெஞ்சு - ஹிந்தி - ஸ்பானிஷ்
5) தமிழ் - பாளி - இலத்தீன்

09. மொழியின் தோற்றப்பாடு பற்றிய கோட்பாடுகளில் ஒன்றாகக் கருதப்பட முடியாதது எது?
1) பரிணாமக் கோட்பாடு
2) சமூக மாற்றக் கோட்பாடு
3) படைப்பாக்கக் கோட்பாடு
4) உடல் மொழிக் கோட்பாடு
5) முகபாவனைக் கோட்பாடு

10. ஈசாப்பின் படைப்புகள் அடங்குவது
1) நாட்டுப் புறக் கதைகளில்
2) கட்டுக்கதைகளில்
3) காப்பியங்களில்
4) நாட்டாரியலில்
5) கதைகளில்

11. “அபிவிருத்தித் தொடர்பாடல்” செயற்றிட்டத்தில் தகவல்களை / தரவுகளைச் சேகரிப்பதற்கு பயன்படுத்தும் முறைகள் யாவையென ஆசிரியர் கேட்ட கேள்விக்குக் கிடைக்கப் பெற்ற சில பதில்கள் பின்வருமாறு.

A - நேர்முக உரையாடல்

B - ஆய்வு செய்தல்

C - அவதானித்தல்.

D - மாதிரி தயாரித்தல்.

E - துறைச் சொற்கோவை (Terminology)

மேற்குறித்தவற்றுள்

1) $A, B, C$ ஆகியன உண்மையாக இருக்கும் அதேவேளை $D, E$ ஆகியன பொய்யானவை.
2) $A, B$ ஆகியன உண்மையாக இருக்கும் அதேவேளை $C, D, E$ ஆகியன பொய்யானவை.
3) $B, C, D$ ஆகியன உண்மையாக இருக்கும் அதேவேளை $A, E$ ஆகியன பொய்யானவை.
4) $C, E$ ஆகியன உண்மையாக இருக்கும் அதேவேளை $A, B, D$ ஆகியன பொய்யானவை.
5) $A, B, C, D, E$ ஆகிய எல்லாம் உண்மையானவை.

agaram.lk

12. மொழி சுவீகரித்தல் (*Acquisition*) என்பது,
1) மொழியின் தனித்துவமான இயல்புகளை இனங்காணல்.
2) மொழியிலுள்ள பதங்களுக்கு புதிய கருத்துக்களை ஆக்கல்.
3) மொழியைப் பயன்படுத்தவும், கிரகித்தலுக்கும் கற்றுக்கொள்ளல்.
4) சொற்களின் கருத்துக்களுக்கேற்ப மொழியின் பயன்பாடு வேறுபடுதல்.
5) விதிமுறைகளுக்கேற்ப ஒழுங்குமுறையில் சரியாக இனங்காணல்.

13. "மக்கள் தொடர்பு என்பது ஒரு அமைப்புக்கும் அதன் மக்களுக்கும் இடையிலான பரஸ்பர புரிநதுணர்வையும் நன்மதிப்பையும் உருவாக்கவும் பேணவுமாக எடுக்கப்படும் திட்டமிட்டதும் நீடித்தருப்பதுமான அனைத்து முயற்சிகளுமாகும்" இந்த வியாக்கியானம் முன்வைக்கப்பட்டது.
   1) பிரித்தானியா பொதுசனத் தொடர்பு நிறுவனத்தால்
   2) விஞ்ஞானி எட்வேர்ட் எல். பேர்னஸ் என்பவரால்.
   3) அமெரிக்க பொதுசனத் தொடர்பு நிறுவனத்தினால்
   4) இந்திய பொதுசனத் தொடர்பு நிறுவனத்தால்.
   5) விஞ்ஞானி ஐவி லீ என்பவரால்

14. கம்பனியொன்றின் முகாமையாளர் தனது எதிர் காலத்திட்டங்கள் பற்றி கம்பனியின் தெரிவு செய்யப்பட்ட குழுவுடன் முறைசாராது கலந்துரையாடினார். அந்தத் திட்டங்கள் பற்றி குறித்த குழு அவர்களுக்குத் தெரிவித்த இன்னொரு குழுவுடன் தகவல்களை மேற்கொண்டும் பரிமாறியது. இந்த நிகழ்வில் மேற்கொள்ளப்படிருக்கும் நடவடிக்கையானது.
   1) ஒரு தனிச் சங்கிலி மாதிரி
   2) புறணி பேசுதல் சங்கிலி மாதிரி
   3) நிகழ்தகவுச் சங்கிலி மாதிரி
   4) கொத்தணிச் சங்கிலி மாதிரி
   5) குறுக்குத் தொடர்பாடல் மாதிரி

15. சமீப காலத்தில் அகிலமயமாதல், பூகோளமயமாதல், சர்வ தேசமயமாதல் போன்ற சொற்கள் முதன்மை பெற்றுள்ளன. இச் செயன்முறையுடன் தொடர்புபட்ட கூற்றுக்களாக அமையக் கூடியவை.
   A - பல்வேறு ஊடகங்கள் ஒன்றிணைந்து ஒரு தொகுதியாக உருவாதல்.
   B - பூகோள கலாசார தொடர்பாடல் சூழல் அறிமுகமாதல்.
   C - குடிமக்கள் செய்தி அறிவிப்பிலும் தொடர்பாடலிலும் ஈடுபடல்.
   D - தகவல் முதலீட்டு (*Informational Capital*) பண்டமாக மாற்றமுறுதல்.
   1) A யும், B யும்
   2) A யும், D யும்
   3) A யும், C யும்
   4) A யும், B யும், D யும்
   5) A யும், B யும், D யும்.

16. ஊடக ஆய்வு அறிக்கை தயாரிப்பில் மூன்றாவது படி நிலையாக அமைவது.
   1) தரவு சேகரித்தல்
   2) ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற சனத்தொகையை தீர்மானித்தல்.
   3) ஆய்வுப் பகுப்பாய்வு.
   4) விதந்துரைகளும் முன்மொழிவுகளும்
   5) நேர்காணல்.

17. கலைவிழா நிகழ்வில் இடம்பெற்ற மேடைநிகழ்ச்சியில் நாடக அளிக்கையும் இடம் பெற்றிருந்தது. இதில் இடம் பெறக் கூடிய தொடர்பாடல் வடிவங்களாக அமைவன.
   1) வாய்மொழி, வாய்மொழியற்ற, செவிப்புல, கட்புலத் தொடர்பாடல்.
   2) கட்புலம், எழுத்து மூலம், முறைசாரா, செவிப்புலத் தொடர்பாடல்
   3) சொல்சார், சொல்சாரா, கட்புலம், முறைசார் தொடர்பாடல்
   4) முறைசார், சொல்சார், கட்புலம், செவிப்புலத் தொடர்பாடல்
   5) முறை சார்ந்தது, கட்புலம், செவிப்புலத் தொடர்பாடல்.

18. நபரிடைத் தொடர்பாடல் நாளாந்த வாழ்க்கையில் அதிகம் இடம் பெறுகின்ற தொடர்பாடல் செயன்முறையாக அமைகின்றது. கூட்டுத் தொடர்பாடலுடன் ஒப்பிடுகின்ற போது இதில் அவதானிக்கப்படக்கூடியது.
   1) தொடர்பாடுவர் பெறுநர் வகிபாகங்கள் நிரந்தரமாக காணப்படல்.
   2) ஒரு நபர் மாத்திரம் இருத்தல்.
   3) தொடர்பாடுபவர் மொழியை மட்டும் பயன்படுத்தல்.
   4) உயிர்ப்ப மிக்கதாக காணப்படல்
   5) தகவல் மூலாதாரம் காணப்படல்.

19. நேற்று இடம் பெற்ற அனர்த்தம் பற்றிய செய்தி அறிக்கை இன்றைய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது செய்தியொன்றின்.
   1) அண்மித்த (*pooximity*) இயல்புடன் தொடர்புபட்டது.
   2) அசாதாரணமாயிருத்தல் (*unusuatness*) இயல்புடன் தொடர்புபட்டது.
   3) தாக்கமுடையதாயிருத்தல் (*Impaact*) இயல்புடன் தொடர்புபட்டது.
   4) காலத்திற்கேற்ற தாயிருத்தல் (*Timeliness*) இயல்புடன் தொடர்புபட்டது.
   5) நம்பகத்தன்மை உடையதாக இருத்தல்.

agaram.lk

20. துறைசார் நிபுணர்களிடம் வினாத்தொடுத்து தகவலைப் பெறுதல், உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள், ஊடக வியலாளர்களை அழைத்து தகவலை தெரிவித்தல், ஆகியன தகவல் மூலகங்களாக அழைக்கப்படும் விதம் முறையே.
1) நேர்முகக் கலந்துரையாடல், செய்திக் குறிப்பு, செய்தியாளர் மாநாடு.
2) நேர்முகக் கலந்துரையாடல், பீட் அறிக்கை, செய்தி நாட்குறிப்பு.
3) உத்தியோகபூர்வ அறிக்கை, செய்தியாளர் மாநாடு, செய்திக்குறிப்பு
4) நேர்முகக் கலந்துரையாடல், செய்திக்குறிப்பு, உத்தியோகபூர்வ அறிக்கை.
5) ஊடக விமர்சனம், ஊடகக் கலந்துரையாடல், ஊடக ஆய்வு.

21. A – அதிகமானோரின் கவனத்தையும் விருப்பத்தையும் பெறுவது
B – உணர்வுகளுடன் தொடர்புபடுவது.
C – முன்பக்கத்தில் கூற்றுக்களில் மென் செய்தியின் இயல்பை பிரதிபலிப்பன.
1) A மட்டும் 2) B மட்டும் 3) B, C மட்டும்
4) A யும், B யும் 5) A யும் C யும் மட்டும்

22. செய்தித்தாள் இயல்புகளில்,
A - வெகுசன ஊடகங்களில் முதன்மையானது.
B - வாழ்நாள் மிகக்குறுகியது.
C - மொழியாற்றலுடன் தொடர்பற்றது.
D - இயக்கமற்ற ஊடகம் (*passive media*)
E - எழுத்தறிவு ஆற்றலுடன் தொடரபுடையது
மேற்குறித்த கூற்றுக்களில்.
1) A யும் B யும் C யும் E யும் உண்மையானது C பொய்யானது.
2) A யும் B யும் D யும் E யும் உண்மையானது C பொய்யானது.
3) A யும் B யும் C யும் D யும் உண்மையானது E பொய்யானது.
4) A யும் C யும் D யும் E யும் உண்மையானது B பொய்யானது.
5) B யும் C யும் A யும் உண்மையானது E யும் D யும் பொய்யானது.

23. ரவி வீதியில் வாகனம் செலுத்தும் போது அடிக்கடி விபத்துக்களை சந்தித்தான். அதே வேளை பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல் சமிஞ்சைகளை கவனத்தில் எடுக்காமையினால் சட்டப்பிரச்சினையை சந்தித்தான். ஆகவே ரவிக்குத் தேவையான தொடர்பாடல் தேர்ச்சியாக அமையக் கூடியது.
1) கட்புல ஊடகத் தேர்ச்சி 2) அச்சு ஊடகத் தேர்ச்சி
3) எழுத்து ஊடகத் தேர்ச்சி 4) செவிப்புல ஊடகத் தேர்ச்சி
5) கட்புல, செவிப்புலத் தேர்ச்சி

24. திணைக்களத்தலைவர் கீழ்மட்ட ஊழியருக்கு சுற்று நிருபம் அனுப்புதல், பணியாளர்கள் தமக்கிடையில் கலந்துரையாடுதல், குறைகேள் அதிகாரியை நியமித்தல் தொடர்பாடல் கருமங்கள் தொடர்புபடும் முறைசார் தொடரபு இயல்புகள் முறையே,
1) குறுக்குத் தொடர்பு, மேலிருந்து, கீழ் நோக்கிய தொடர்பு கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பு.
2) கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பு, மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பு, குறுக்குத் தொடர்பு.
3) மேலிருந்து கீழ்நோக்கிய தொடர்பு, கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பு.
4) குறுக்குத் தொடர்பு, கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பு, மேலிருந்த கீழ் நோக்கிய தொடர்பு.
5) குறுக்குத் தொடர்பு, நேரான தொடர்பு, இருவழித்தொடர்பு

25. பத்திரிகைக்கான காட்டுன், சித்திரங்களை வரைதல் பணிகள் இடம் பெறுவது.
1) விளம்பரப்பிரிவின் கீழ் 2) ஆசிரியர் பீடத்தின் கீழ்
3) பொதுக்கரும பிரிவின் கீழ் 4) அச்சிடல் பிரிவின் கீழ்
5) விளையாட்டுப் பிரிவின் கீழ்

26. “யதார்த்த நிலைகளை ஆக்கபூர்வமான கலையம் சங்கங்களுடன் வெளிப்படுத்தும் கலை” என்று ஜோன் கிரேயஸன் கூறிய சினிமாப்படவகை.
1) விவரண அறிக்கை படங்கள்
2) முழுநீள கதைப்படங்கள்
3) குறுந்திரைப்படங்கள்
4) விளம்பரப்படங்கள்
5) செய்திப் புகைப்படங்கள்.

27. வெகுசன ஊடகங்களில் தொலைக்காட்சியின் தாக்கம் சமூகத்தில் வலுவுடையதாகியுள்ளது. தொலைக்காட்சிக் கலாசாரம் (*Television Culture*) உருவாகி வருகின்றது. அந்த வகையில் பின்வருவனவற்றில் தொலைக்காட்சிக் கலாசார அம்சங்களுடன் தொடர்புபடாத கூற்று.
1) இல்லங்களில் தொலைக்காட்சி வைக்கப்பட்டுள்ள இடம் பொதுவான இடமாகக் காணப்படல்.
2) ரெலி நாடகங்களை பொறுத்து நாளாந்த கடமைகள் அட்டவணைப்படுத்தப்படல்.
3) வயது வேறுபாடின்றி அருகருகில் உட்கார்ந்து நிகழ்ச்சிகளை இரசிக்கும் சந்தர்ப்பம்.
4) தனிப்பட்டவர்களின் ஆடை, அணிகலங்கள், நடத்தையில் தொலைக்காட்சி பாத்திரங்களின் பிரதிபலிப்பின்மை.
5) மேலைத்தேய மயமாக்கலுடன் தொடர்புபட்டுள்ளமை.

28. பாடசாலை ஒன்றின் பரிசளிப்பு விழா அறிவிப்புப் பணி உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என ஆசிரியர் குறிப்பிட்டார்.
A - அடிப்படைத் தகவல்களை ஆராய்தல்.
B - தேவையான விடயங்களை தெரிதல்.
C - தொடர்பாடுபவர்களை இனங்காணுதல்.
D - பொருத்தமான நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்.
மேற்குறித்தவற்றில் மிக பொருத்தமானது.
1) A, B ஆகியன
2) A, C ஆகியன
3) A, D ஆகியன.
4) B, D ஆகியன
5) B, C ஆகியன.

29. பின்வரும் கூற்றக்களில் வானொலி தொடர்பான இயல்பை பிரதிபலிப்பது.
1) வானொலி உடனடியாக தகவலை வழங்கும், பெறுநருக்கு உயர்மட்ட பொழுதுபோக்கை வழங்குகின்றது.
2) வானொலி நேயருக்கு உயர்மட்ட கற்பனா சக்தி தேவைப்படாது.
3) தொடர் வாக்கியம், தொடர் இலக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
4) வானொலிக்கு இலகுவான உபயோகிக்கக் கூடிய எழுத்தறிவு அவசியமில்லை.
5) குறுகிய எளிய வாக்கியம் பொருத்தமானது அறிவிப்புக்கள் உடனடியாக விளங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

agaram.lk

30. வானொலி ஊடக அறிவிப்பாளர் தெரிவில் கவனத்தில் கொள்ளப்படும் அம்சங்களாக அமைக்கூடியவை.
A - வேகமாக வசனங்களை வெளிப்படுத்தும் ஆற்றல்
B - குரல் வளம்.
C - குறுகிய நேரத்தில் குறைந்தளவான விடயங்களை வாசிக்கும் ஆற்றல்.
D - விபரணத்தை பிரதியின் துணையின்றி முன்வைக்கும் ஆற்றல்.
E - பிழையின்றி மொழியை கையாளும் ஆற்றல்.
1) BCDE
2) ABDE
3) ACDE
4) CDEB
5) BDCE

31. “ஊடக கலாசாரம் மக்கள் காலாசாரத்தை பின்தள்ளிவிட்டு முனைப்பு பெற்றுள்ளது”. பின்வருவனவற்றுள் கலாசாரப் பரிமாற்ற செயன்முறையின் விளைவு அல்லாதது.
1) நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் ஒத்துழைப்பு உருவாக்கும்.
2) இதன் காரணமாக சமூக அபிவிருத்தி உருவாக்கும்.
3) இதன் காரணமாக முரண்பாடு உருவாகும்.
4) சமூக சகவாழ்வு உருவாகும்.
5) சமூக முரண் நிலையில் இழிவு நிலையை உருவாக்கும்.

32. ஊடக விமர்சகர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பு அல்லாதது,
1) ஊடகம் பற்றி குறிப்பிட்ட அளவு அறிவு.
2) ஊடகம் பற்றிய பரந்தளவு அறிவு.
3) பெறுநர் பற்றிய ஆழ்ந்த அறிவு.
4) ஊடகத்தின் மீது நேரடி, மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய அறிவு.
5) ஊடக உள்ளடக்கம் பற்றிய அறிவு.

33. முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

ரது – முரண்பாட்டை நேர்முறையில் (*positive*) அணுகுதல்.
குமார் - முரண்பாட்டை உடன்பாடான நிலைக்கு இட்டுச் செல்லல்.
பாலன் - முரண்பாட்டை மறுத்தலுக்கு உட்படுத்தல்.
கஜன் - முரண்பாட்டு சூழ்நிலையை ஆக்கபூர்வ நிலைக்கு நகர்த்துதல்.
மாதவன் - முரண்பாட்டினை பயங்கர நிலை, அழிவு மட்டம் நோக்கி நகர்த்துதல்.

மேற்படி கூற்றுக்களில் முரண்பாட்டு முகாமைத்து எண்ணக்கரு தொடர்பில் சரியான இயல்பு நிலைகளை வெளியிட்டவர்கள்.
1) ரவி மற்றும் பாலன்
2) ரது, பாலன் மற்றும் கஜன்
3) ரது, குமார் மற்றும் கஜன்
4) குமார், பாலன் மற்றும் மாதவன்
5) குமார், பாலன், கஜன் மற்றும் மாதவன்

34. ஊடக எழுத்தறிவின் மூலதத்துவ அடிப்படைகளை ஒழுங்கு முறையே காட்டுவன.
1) விமர்சனசிந்தனை, பங்குபற்றுதல், சுயமதிப்பீடு, விளங்கிக் கொள்ளல், பகுப்பாய்வு, செயன்முறை.
2) பங்குபற்றுதல், சுயமதிப்பீடு, விமர்சன சிந்தனை, பகுப்பாய்வு, செயன்முறை.
3) சுயமதிப்பீடு, பங்குபற்றுதல், விமர்சன சிந்தனை, விளங்கிக் கொள்ளல், செயன்முறை, பகுப்பாய்வு.
4) பகுப்பாய்வு, விமர்சனசிந்தனை, பங்குபற்றல், சுயமதிப்பீடு, விளங்கிக் கொள்ளல், செயன்முறை.
5) செயன்முறை, பங்குபற்றுதல், விமர்சன சிந்தனை, சுயமதிப்பீடு, விளங்கிக் கொள்ளல், பகுப்பாய்வு.

agaram.lk

35. பொதுசனத் தொடர்பியலாளர் (*PRO*) ஒருவரிடம் அவதானிக்கப்படக்கூடிய இயல்புகள் கீழே தரப்படுகின்றன.

A - நட்புணர்வு, மதிப்பளித்தல், இணக்கத்தன்மை.

B - பரந்த மனப்பான்மை, சுயமதிப்பீடு, சுயகட்டுப்பாடு.

C - பொது உளப்பாங்கு, திட்டமிடல், அறிக்கையிடல் திறன்.

இவற்றுள் பொதுசன தொடர்பியலாளர் பண்புகளாக உள்ளடக்கப்பட்டிருப்பது.
1) A யில் மட்டும்
2) A யிலும் C யிலும் மட்டும்
3) B யிலும் C யிலும் மட்டும்
4) A யிலும் B யிலும் மட்டும்
5) A, B, C ஆகிய எல்லாவற்றிலும்

36. அபிவிருத்தி தொடர்பாடல் செயன்முறையில் செயற்றிட்ட பிரேரணை தயாரிப்பில் உள்ளடக்கப்பட முடியாத கூறாக அமைவது.
1) தகவல் திரட்டலும் முன் மொழிதலும்
2) இலக்கும், நோக்கும்.
3) முறைமையும், உத்திகளும்
4) வளப்பயன்பாடு, வரவு செலவும்
5) எல்லையும், வரையறைகளும்.

37. கற்றல் தொடர்பான தோண்டைக்கின் தூண்டிதுலங்கல் அல்லது பிணைப்பை மீண்டும் மீண்டும் செயன்முறைப்படுத்துவதன் ஊடாக வலுப்படுத்தப்படுகின்ற செயன்முறை இடம்பெறுவதாக குறிப்பிடுகின்ற விதி பின்வருமாறு அழைக்கப்படுகிறது.

1) ஆயத்த விதி
2) பயிற்சி விதி
3) விளைவு விதி
4) பரிசோதனை விதி
5) நிபந்தனைப் படுத்தல் விதி

38. மொழிசார் மரபுகள், விதிகள், இலக்கணங்கள். நியதிகள் அவசியமாக அமைவது.

1) உரையாடல்
2) பிரதிஎழுத்தாக்கத்தில்
3) பேச்சில்
4) ஆற்றுகையில்
5) விபரணத்தில்

39. அபிவிருத்தி தொடர்பியலில் பொதுசன ஊடகங்களை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை குறிப்பிடும் கட்டமைப்பு.

1) சமூக ஊடக கட்டமைப்பு
2) இருபடிமுறைக் கட்டமைப்பு
3) பரிவத்தனை மாதிரி கட்டமைப்பு
4) சீன அபிவிருத்தி தொடர்பாடல் கட்டமைப்பு
5) மூன்று படிமுறைக் கட்டமைப்பு

40. கண்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்கு அரசியல் வாதியை அழைத்தல், பயனாளிகளை கவரும் வகையில் பரிசுப்பொருட்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் பொதுசன தொடர்பு நிகழ்ச்சித் திட்டத்தில்.

1) மக்கள் தொடர்பு இலக்க மற்றும் நோக்குகளை வரையறுத்தலுக்குள் உள்ளடங்கும்.
2) மக்கள் தொடர்பு திட்டமிடலுக்கு உள்ளடங்கும்.
3) மக்கள் தொடர்பு முன்மதிப்பிட்டு செயன்முறைக்குள் உள்ளடங்கும்.
4) மக்கள் தொடர்புக்கான முறைகள், உத்திகளுக்குள் உள்ளடங்கும்.
5) மக்கள் தொடர்புக்கான பயனாளிகளை இனங்காணும் செயன்முறைக்குள் உள்ளடங்கும்.

agaram.lk

41. வன்முறை கவர்ச்சி எண்ணக்கரு *(The violent is attractive)* தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - வன்முறை நிகழ்ச்சிகள் மனிதனை கவரக்கூடியது.

B - ஊடக இலாப நோக்கிற்கு வன்முறை கவர்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது.

C - பத்திரிகையில் குற்றங்கள், விபத்துக்கள் முதற்பக்கத்தில் உள்ளடக்கப்படுவது வன்முறை கவர்ச்சியின் அடிப்படையிலாகும்.

D - வன்முறை நிகழ்ச்சிகள் ஊடக ஊடகங்கள் சமூக நோக்கை அடைகின்றன.

மேற்படி கூற்றக்களில் வன்முறைக் கவர்ச்சி செயன்முறையுடன் நெருக்கமானவை.

1) A யும் C யும்
2) B யும் D யும்
3) A யும் D யும்
4) A யும் B யும் C யும்
5) A, B ,C D ஆகிய எல்லாம்.

42. உள்ளார்ந்த தொடர்பாடல் செயன்முறைக்கு எடுத்துக் காட்டாக அமையாதது.

1) ஞாபகச் செயன்முறை
2) கற்றல் செயன்முறை
3) சுய எண்ணக்கரு செயன்முறை
4) தீர்மானம் எடுத்தல் செயன்முறை
5) பொது உடன்பாட்டு செயன்முறை

43. டெய்லர், லிண்டன், மலினோவுஸ்கி ஆகியோர் வரை விலக்கணம் செய்தது.

1) ஊடக கலாசாரம் பற்றி
2) கலாசாரம் பற்றி
3) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றி
4) சமூகப் படிமம் பற்றி
5) அபிவிருத்தி பற்றி

44. அபிவிருத்தி தொடர்பாடல் பற்றி நாயர் - வயிட் அகியோரின் பரிவர்த்தனை மாதிரி அணுகு முறையின் உள்ளடக்கப்பட முடியாத எண்ணக்கரு.

1) மேல்மட்ட பங்கேற்பை உயர்த்துதல்.
2) ஊடகங்களின் ஒருங்கிணைப்பு.
3) ஒன்றிணைந்து தீர்மானித்தல்.
4) கீழ் இருந்து மேல் நோக்கிய அபிவிருத்தி.
5) குழுக்களை உருவாக்குதல்.

45. கிளைமொழியின் குணாம்சங்கள் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு.

மது – பிரதேச தனித்துவங்களை பிரதிபலிப்பது.
ரவி – ஏனைய மொழிகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது வேகமான வளர்ச்சி போக்கை கொண்டமைந்தது.
குமார் - புதிய சொற்கள், உவமைகள், வடிவங்கள் தோற்றம் பெற்று இருத்தல்.
சாந்தன் - குறித்த குழு மற்றும் மக்களின் தனித்துவ அடையாளத்தை பிரதிபலிப்பது.
இவற்றுள் கிளைமொழியின் குணாம்சங்களை உள்ளடக்கிய கூற்றக்கள்

1) மது மற்றும் குமார் 2) மது மற்றும் சாந்தன் 3) மது, ரவி மற்றும் சாந்தன்
4) மது, குமார் மற்றும் சாந்தன் 4) ரவி, குமார் மற்றும் சாந்தன்.

46. "மோதல் முக்கோணியில் கல்துங் சூழமைவு, உளப்பாங்கு, நடத்தை ஆகிய மூலக்கூறுகளை உள்ளடக்கியுள்ளார்" மேற்படி மூலக்கூறுகளுடன் தொடர்புபட்ட காரணியாக அமையக்கூடியன முறையே,

1) எண்ணெய், சண்டை, பயம் 2) உணவு, சந்தேகம், பயமுறுத்தல்
3) நிலம், நம்பிக்கை, தாக்குதல் 4) வாதப் பிரதி வாதம், பணம், வெறுப்பு
5) தாக்குதல், பதவி, அச்சம்

47. நாட்டாரியல் ஊடக இயல்பை பிரதிபலிக்காதது.

1) மொழிநடை பேச்சு வழக்கில் அமைந்தது. 2) பலவடிவங்களை கொண்டமைந்தது.
3) வாய்மொழி வழியாகப் பரப்பப்படுதல் 4) பாரம்பரிய கலாசாரத்தின் அடையாளம்
5) சமூகத்தில் குறைந்த மட்டத்தில் தாக்கம் செலுத்துதல்.

agaram.lk

48. அபிவிருத்தி தொடர்பாடலில் சீன மாதிரியை முன்வைத்தவர்.

1) வாஸ்வெல் 2) நாயர் மற்றும் வயிட் 3) மாவோ சேதுங்
4) காந்தியடிகள் 5) எவரட் எம். ரோஜஸ்

49. உலகமயமாக்கல் செயன்முறை தொடர்பில் மாணவர் சிலர் உரையாடிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நயன் - உலகமயமாக்கலின் விளைவால் புதிய தராண்மை வாதம் தோற்றம் பெற்றுள்ளது.
சிவா – ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விரிவாக்கம் உலகமயமாக்கலுக்கு அடிப்படையானது.
கரன் - தேசிய அரசு நலிவடைந்து பூகோள சிந்தனை முதன்மை பெறுதல்.
சயன் - தேசிய தனித்துவம், அடையாளங்கள் உயர் மட்டத்தில் பேணப்படுதல்.

1) சிவா, நயன் கூற்றுக்கள் 2) சிவா, கரன் கூற்றுக்கள்
3) நயன், சிவா, கரன் கூற்றுக்கள் 4) சிவா, கரன், சயன் கூற்றுக்கள்
5) நயன், கரன், சிவா, சயன் ஆகிய எல்லோரின் கூற்றுக்கள்

50. சமூகத் தொடர்பாடல் வலுவுள்ளதாக அமைவதற்கு உதவக் கூடியது.

1) ஆழிபரிவு (*Empathy*) 2) சுய எண்ணக்கரு (*self concept*)
3) பரப்புரை (*propaganda*) 4) கருத்தியல் (*Ideology*)
5) மாறா எண்ணக்கரு (*stereo Type*)

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| juk;:- 13 (2018) | njhlughlYk; Clfftw;i fAk; II | %dW kzpj;jpahyk; |
|---|---|---|

## பகுதி II

**அறிவுறுத்தல் :-**

❖ **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**01. பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ள விளம்பரத்திற்கேற்ப, மலிந்த ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் உத்தியோகத்திற்காக விண்ணப்பம் செய்து, அதற்கான நேர்முகப் பரீட்சைக்கும் சென்றான்.**

1) நேர்முகப் பரீட்சையின் போது நடைபெறுகின்ற இருவகைத் தொடர்பாடல்களைக் குறிப்பிட்டு அதனுடன் பொருத்தமான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) ஏனைய ஊடகங்களுடன் ஒப்பிடும் போது தொலைக்காட்சி ஊடகத்தில் காணப்படும் பலங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றும் கிரகிப்பவர்களுக்கு முக்கியம் பெறுவது எவ்வாறெனச் சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)

3) பொதுவாக அச்சு ஊடகங்களிலும் மின் ஊடகங்களிலும் உள்ள முக்கிய வேறுபாடுகள் நான்கினை தெளிவுபடுத்துக. (6 புள்ளிகள்)

4) நவீன ஊடகங்களுக்கும் வெகுசன ஊடகங்கச் செயற்பாடுகளுக்கும் இடையில் அவதானிக்கப்படக்கூடிய வேறுபாடுகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (8 புள்ளிகள்)

agaram.lk

**02. ‘ஒரு அமைப்புக்கும் அதனுடன் இணைந்த மக்களுக்கும் இடையில் பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் பொதுசனத் தொடர்பு” என வரையறை செய்யப்படுகிறது.**

1) பொதுசனத் தொடர்பு எண்ணக்கருவிற்கும் விளம்பர எண்ணக்கருவிற்கும் இடையிலான பிரதான வேறுபாடு ஒன்றைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கப்படும் கம்பனி ஒன்றில் பிரபல சினிமா நடிகை பணிக்கு அமர்த்தப்பட்டார்.” இவ்வாறான நபர்கள் மூலம் மேற்படி கம்பனிக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்களை இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(4 புள்ளிகள்)

3) குறித்த ஒரு நிறுவனத்தில் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக (PRO) நீங்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளீர்கள் எனின் நிறுவனம் சார்ந்த மக்கள் தொடர்பை வலுப்படுத்துவதற்கு திட்டமிட்டு பயன்படுத்தக்கூடிய கருவிகள் நான்கைக் குறிப்பிட்டு, அவற்றில் இரண்டை எவ்வாறு வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்தலாம் என்பதை விளக்குக. (6 புள்ளிகள்)

4) பொதுசனத் தொடர்புக்காக அரசாங்க தகவல் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிட்டு, பொலிஸ் - பொதுமக்கள் தொடர்பு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டை செயற்படுத்தும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (8 புள்ளிகள்)

**03. "அபிவிருத்தி தொடர்பாடல் என்பது நாடு ஒன்றில் துரிதமான மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய மனித தொடர்பாடலுக்கு உரிய கலை அல்லது விஞ்ஞானம் ஆகும்."**

1) அபிவிருத்தி தொடர்பான வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்கள் நால்வரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) அபிவிருத்தி தொடர்பாடல் குறித்த சீன மாதிரியின் இயல்புகளைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

3) அபிவிருத்தித் தொடர்பாடல் கருத்திட்டமொன்றினை திட்டமிடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய நான்கு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

4) "மக்கள் பங்குபற்றலை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தியில் பங்கெடுக்கும் நான்கு நிறுவன ரீதியான அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (8 புள்ளிகள்)

**04. ஆக்க ரீதியான தொடர்பாடல் பிரவேசங்களை தொடர்பாடல் நிலைகளிலும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களிலும் அவதானிக்க முடிகிறது.**

1) நாட்டாரியல் பண்புகள் நான்கைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

2) பத்திரிகையொன்றில் நீர் அவதானிக்கக் கூடிய ஆக்க ரீதியான அறிக்கையிடல்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் இரண்டைப் பற்றி சுருக்கமாக விபரிக்குக. (4 புள்ளிகள்)

3) மரபு சார்ந்த அடிப்படையிலும், கிராமிய மக்கள் மத்தியிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற ஆக்க தொடர்பாடல் வடிவங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவை மக்கள் மத்தியில் வலுவுள்ள தொடர்பாடல் ஊடகமாக இருப்பதற்கான காரணிகளை இரண்டு அம்சங்களைக் கொண்டு விபரிக்குக. (6 புள்ளிகள்)

4) தொடரறா ஊடகவியல் (*Online media*) இணையம் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நவீன ஊடகம் (*New media*) என்ற அடிப்படையில் தொடறா ஊடகத்தின் தனித்துவமான அம்சங்கள் நான்கைக் குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)

**05. விழிப்புணர்வு மிக்க பெறுநர் மற்றும் ஊடக எழுத்தறிவு பற்றிய செயலமர்வின் பின்னர் நல்ல பாடல்களை இரசிப்பதற்கும் நல்ல படங்களைப் பார்ப்பதற்கும் ரெலி நாடகங்களை பார்ப்பதில்லை என்ற தீர்மானத்திற்கும் கவிதா வந்தாள்.**

1) ஊடக எழுத்தறிவு, ஊடக விமர்சனம் ஆகிய இரு எண்ணவாக்கத்திற்கு இடையிலான தொடர்பை அறிமுகம் செய்க. (2 புள்ளிகள்)

2) ஊடக விமர்சன செயன்முறை முன்னெடுக்கப்படும் மூன்று பிரதான அடிப்படைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

3) ஊடக விமர்சன செயன்முறையின் பிரதான அணுகுமுறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் மூன்றினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

4) ஊடக விமர்சனப் போக்கு ஊடக அறிவு சமூகத்திற்கு எந்த வகையில் முக்கியத்துவம் வகிக்கின்றது என்பதை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (8 புள்ளிகள்)

**06.**

1) கற்றல் தொடர்பான இரு கோட்பாடுகளையும் பெயரிடுக. (2 புள்ளிகள்)
2) சமூகமயமாக்கல் செயன்முறை இடம்பெறும் மூன்று வழிமுறைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)
3) பத்திரிகை ஊடகங்களில் வன்செயல் வெளிப்படுத்தப்படும் மூன்று விதங்களைக் குறிப்பிட்டு விபரிக்க. (6 புள்ளிகள்)
4) மொழியைத் தொலைக்காட்சி ஊடகத்திற்கு பயன்படுத்தும் போது கவனஞ் செலுத்த வேண்டிய மூன்று அடிப்படை இயல்புகளை விளக்குக. (8 புள்ளிகள்)

**07.**

1) உள நிலை பாதிக்கப்படுவதால் உருவாக்கக்கூடிய தனியாள் ஒருவரின் தவறான நடத்தை வெளிப்பாடுகள் நான்கைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
2) ஊடகப் பண்பாட்டின் நான்கு பண்புகளைப் பெயரிட்டு, அவற்றுள் ஒன்று பற்றிச் சுருக்கமாக விவரித்து எழுதுக. (4 புள்ளிகள்)
3) வெகுசன ஊடகங்களில் தணிக்கை வெவ்வேறு வடிவங்களில் செயற்படுத்தப்படுகின்றது. அத்தகைய நான்கு வடிவங்களைப் பெயர் குறிப்பிட்டு, அவற்றுள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)
4) அரசியல் ஊர்வலம் ஒன்றுக்கான சுவரொட்டி ஒன்றில் அவசியம் உள்ளடக்கப்பட வேண்டிய நான்கு விடயங்கள் பெயரிட்டு, சுவரொட்டிகள் எடுத்துக் கொள்ளும் முக்கியத்துவத்தை மூன்று காரணங்களின் அடிப்படையில் விவரிக்குக. (8 புள்ளிகள்)

agaram.lk